**14 மார்ச் • லெந்து இரண்டாம் வாரத்தின் திங்கள்கிழமை**

**ஆண்டவரே, உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியால்… வெட்கத்துக்குரியவர்களானோம்**

**தானியேல் 9:4-10**

4. என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவ அறிக்கைசெய்து: ஆ ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே,

5. நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமக்காரராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம்பண்ணி, உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்றுபோனோம்.

6. உமது நாமத்தினாலே எங்கள் ராஜாக்களோடும் எங்கள் பிரபுக்களோடும் எங்கள் பிதாக்களோடும் தேசத்தினுடைய சகல ஜனங்களோடும் பேசின தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்குச் செவிகொடாமற்போனோம்.

7. ஆண்டவரே, நீதி உமக்கே உரியது; உமக்கு விரோதமாகச் செய்த துரோகத்தினிமித்தம் உம்மாலே சமீபமும் தூரமுமான எல்லா தேசங்களிலும் துரத்தப்பட்டிருக்கிற யூதமனுஷரும் எருசலேமின் குடிகளும் சகல இஸ்ரவேலருமாகிய நாங்கள் இந்நாளில் இருக்கிறபடியே, வெட்கம் எங்களுக்கே உரியது.

8. ஆண்டவரே, உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியால், நாங்களும் எங்கள் ராஜாக்களும் எங்கள் பிரபுக்களும் எங்கள் பிதாக்களும் வெட்கத்துக்குரியவர்களானோம்.

9. அவருக்கு விரோதமாக நாங்கள் கலகம்பண்ணி, அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு எங்களுக்கு முன்பாகவைத்த அவருடைய நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாங்கள் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்.

10. ஆனாலும் எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு.

**தியானம்**
தீர்கதரிசியாகிய எரேமியா, பல ஆண்டுகளுக்கு முன்பாகவே, யூத ஜனங்கள் பாபிலோனின் பிணைபட்டு எழுபது வருடங்கள் பாடு அனுபவிப்பார்கள், அதற்கு பின்னாக பாபிலோன் வீழ்ந்துபோகும் என்று அறிக்கையிட்டார் (எரே 25:12-13). பாபிலோனும் நிச்சயமாக வீழ்ந்தது, தானியேல் எரேமியாவின் தீர்க்கதரிசனத்தை நினைவுக்கூர்ந்தார் (தானி 9:1-2). வியக்கத்தக்க வகையில், அவர் ஸ்தோத்திரத்துடன்

(அல்லேலுயா! எரேமியா சரியாகச் சொன்னார்) என்று பதில் அளிக்கவில்லை. ஆனால் அவரோ ஜெபத்தின் மூலமாக ஆண்டவரைத் தேடினார் (9:3).

தானியேலுடைய ஜெபத்தின் முதல் பாகம் (9:4-10) பாவ அறிக்கையாகும்: ஆண்டவர் மகத்துவமுள்ளவர், ஆண்டவர் உண்மையுள்ளவர், ஆண்டவர் தம்முடைய வார்த்தையின்படியே செய்கிறவர் (வச. 4), ஆனால் இஸ்ரவேலோ மறுபடியும் மறுபடியுமாக அவருக்கு விரோதமாக பாவஞ் செய்தது ( நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமக்காரராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம்பண்ணி, உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்றுபோனோம் வச. 5) கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை அனுப்பி அவர்களைத் திரும்ப அழைத்தார், அவர்கள் அவருக்கு செவிகொடாமற் போனார்கள் (வச. 6). அதனால் ஆண்டவர் தம்முடைய ஜனத்தின் பாவத்திற்கு தக்க கடினத்தோடு அவர்களை துரத்திவிட்டார் (வச. 7, 9) இஸ்ரவேல் இராஜக்களும், ஜனங்களும் ஓரே விதமாக தேவனுடைய வார்த்தையை அசட்டை பண்ணினார்கள் அதற்குரிய பிரதிபலன்களையும் அனுபவித்தார்கள்.

ஆண்டவரே, எங்களுக்கு மன்னிப்பில்லை, ஆண்டவரே நாங்கள் உமக்கு செவிகொடுத்திருக்க வேண்டும், உம்மை அசட்டை பண்ணியதால் வெட்கத்தில் இருக்கிறோம். என்பதே இந்நாளிற்குரிய வாசிப்பின் பாரம். தானியேலின் வார்த்தைகள் ஆண்டவருடைய உன்மையான தன்மையை பிரதிபலித்து காட்டுகிறது, இஸ்ரவேலின் கடினத்தையும், பாவத்தின் தன்மையையும் தெளிவாக உணர்த்துகிறது.

தானியேலின் நேர்மையான வாக்குமூலம் நம் இதயங்களில் எதிரொலியை எழுப்ப வேண்டும். நாம் தேவனை வீழ்த்திய, தேவனுக்குக் கீழ்ப்படியாமல், துரோகமாக, வஞ்சகமாகச் செயல்பட்டு, கர்த்தரின் பெயருக்கு அவப்பெயரை ஏற்படுத்திய காலங்களைப் பற்றி சிந்திக்க இது நம்மை வழிநடத்த வேண்டும் - நாமும் (சில நேரங்களில்) நாம் சேர்ந்த தேவாலயங்களும்.

தானியேல் 9-ம் அதிகாரம் இத்துடன் காரியங்களை நிறுத்திக் கொள்ளவில்லை: தானியேல் பாவ அறிக்கையோடு நில்லாமல் அடுத்தபடியாக விண்ணப்பம் செய்கிறார் (ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும் வச. 19). ஆண்டவர் அவருடைய ஜெபத்தைக் கேட்கிறார், “நீ எனக்கு மிகவும் பிரியமானவன்” (வச. 23) என்னும் வார்த்தை அவருக்கு வருகிறது, ஆகவே நாமும், எவ்வித தயக்கமுமில்லாமல் நம்முடைய பாவங்களை அறிக்கையிடுவோம் ஆண்டவர் செவிகொடுத்து மன்னிப்பார்.

**ஜெபம்**

ஆண்டவரே, தொடர்ந்து உம்முடைய மகிமைக்குத் தகுதியில்லாதவர்களாக, அறியாமையினாலோ அல்லது தெரிந்திரிந்தும் கீழ்படியாமல், இருந்த அந்த தருணங்களில் உமது நாமத்தை எங்களது செய்கைகளினால் கனவீனப்படுத்தி இருக்கிறோம். உம்முடைய இரக்கங்களை நம்புகிறோம்; தயவாய் எங்களை குணப்படுத்தி, உம்முடைய வழிகளில் நடக்க எங்களுக்கு ஒரு புதிய விருப்பத்தைத் தாரும்.

**செயல்**

பிரார்த்தனை செயலில் பிரதிபலிக்க வேண்டும். பாவத்தை ஒப்புக்கொள்வதில், வேறொருவருக்கு அநீதி இழைத்ததை நீங்கள் உணர்ந்தால், காரியத்தைச் சரிசெய்வதற்கு நீங்கள் என்ன நடைமுறை நடவடிக்கைகளை எடுக்கலாம்?

*முனைவர் பிலிப் சாட்டர்த்வைட்*
*பழைய ஏற்பாடு மற்றும் பைபிள் விளக்கம் விரிவுரையாளர்*
*பைபிள் கிராஜுவேட் ஸ்கூல் ஆ்ஃப் தியாலஜி*

**15 மார்ச் • லெந்து இரண்டாம் வாரத்தின் செவ்வாய்க்கிழமை**

## இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்

**யோவான் 6:52-59**

52. அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள்.

53. அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

54. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.

55. என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.

56. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.

57. ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.

58. வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப் போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.

59. கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயத்திலே அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார்.

**தியானம்**

மேலுள்ள பகுதி மார்பர்க் கொலக்வியை (அக்டோபர் 1529) நினைவூட்டுகிறது. இதில் இரண்டு முன்னனி சீர்த்திருத்தவாதிகளான மார்டின் லூதரும் உல்ரிக் ஜிவிங்க்லியும், திருவிருந்தின் சமயத்தின் போது கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் குறித்து வேதாகமத்தின் அடிப்படையில் தாங்கள் புரிந்துக் கொண்டதைக் குறித்து உணர்வுப்பூர்வமாக கலந்துரையாடிக் கொண்டனர். அவர்களுடைய புரிந்துக் கொள்ளுதல் வெவ்வேறாக இருப்பினும், இந்த சந்திப்பு இவர்கள் ஒவ்வொருவரும் தம்முடைய வாழ்க்கையிலும், நடைமுறையிலும் தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்தார்கள் என்பதை தெள்ளத்தெளிவாகக் காட்டுகிறது.

லூத்தரன் பாவ அறிக்கைகள் உதவிகரமாக இந்த பத்தியிலிருந்து நமக்கு நினைவூட்டியது:
"61. ஆகையால், கிறிஸ்துவின் மாம்சத்தை இரண்டு விதமாக உண்பது உள்ளது, ஒன்று ஆவிக்குரியது, அதில் கிறிஸ்து குறிப்பாக யோவான் 6:54 ஐக் கருதுகிறார், இது வேறு வழியில்லாமல் ஆவி மற்றும் விசுவாசத்துடன், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் தியானிப்பதிலும்  நிகழ்கிறது. அதே போல் திருவிருந்தும் கூட, மற்றும் அது பயனுள்ளதாகவும் ஆசீர்வாதமாகவும், மற்றும் அனைத்து கிரிஸ்துவர் இரட்சிப்பிற்கு எல்லா நேரங்களிலும் அவசியமாயிருக்கிறது; ஆவிக்குரிய பங்கேற்பு இல்லாமல், திருவிருந்தில் புனிதமான அல்லது வாய்வழியாக உண்பது நன்மதிப்பானது மட்டுமல்ல, அது தீங்கானது மற்றும் மோசமானது [கண்டனத்திற்கு ஒரு காரணம்]". - புக் ஆ.்.ப் கான்கார்ட், சாலிட் டெக்லரேஷன்ஸ் கட்டுரைகள் VII.

"பரலோகத்திலிருந்து இறங்கிய அப்பத்தின்" இந்த ஆவிக்குரிய உண்ணுதல் வாழ்க்கைக்கு அவசியமானது என்று இயேசு கூறினார், மேலும் நமது பாவங்களை மன்னிப்பதற்காக புனிதமான உண்ணுதலை எதிர்பார்க்கிறார். பாவ மன்னிப்பு இல்லாமல், உயிர்த்தெழுதலும் இல்லை, ஜீவனும் இல்லை, எல்லாரும் பாவம் செய்து, தேவனுடைய மகிமையை இழந்துபோயிருக்கிறார்கள் (ரோமர் 3:23). நமக்காக சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் மூலம் மட்டுமே, மக்களுக்கு உண்மையில் வாழ்க்கைக்குத் தேவையானவை, பூமிக்குரிய உணவு மற்றும் பானங்களால் வழங்க முடியாத தேவனுடனான ஒரு வாழ்க்கை. சிங்கப்பூரில் சிலர் “வாழ்வதற்காக சாப்பிடுகிறார்கள், சாப்பிடுவதற்காக வாழ்கிறார்கள்” என்று சொல்கிறார்கள். இங்கு உண்ணும் கலாச்சாரம் வலுவானது. நாம் அவர்களுடன் ஆவிக்குரிய உணவையும் பகிர்ந்து கொள்ள வேண்டும், அதனால் அவர்கள் உண்மையிலேயே தேவனுடன் வாழ்வார்கள்.

**ஜெபம்**

ஆண்டவரே, நான் உமது வார்த்தையைத் தியானிக்கும்போது, கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து நமக்காக வாழ்வதால், நான் வாழ பரலோகத்திலிருந்து வரும் அப்பத்தை ஆவிக்குரிய ரீதியில் உண்ணும் நம்பிக்கையை எனக்குக் கொடுங்கள். வாழ்க்கையில் நான் அன்றாடம் சந்திக்கும் அனைத்து பிரச்சனைகளிலும் சோதனைகளிலும் நற்செய்தியின் வார்த்தையில் உண்மையான நம்பிக்கையுடன் தங்கியிருக்க எனக்கு உதவும்.

**செயல்**

உங்களுக்குத் தெரிந்த ஒருவரை ஒரு நல்ல உணவுக்கு அழைக்கவும், மேலும் பரலோகத்திலிருந்து வரும் அப்பத்தை ஆவிக்குரிய ரீதியில் சாப்பிடுவதன் முக்கியத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளவும். ‘மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து வருகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்’ (மத். 4:4).

*அருட்திரு மார்ட்டின் யீ*
*பிஷப் லு குவான் ஹோவின் உதவியாளர்*
*சிங்கப்பூரில் உள்ள லூத்தரன் திருச்சபை*

**16 மார்ச் • லெந்து இரண்டாம் வாரத்தின் புதன்கிழமை**

**இன்னும் இயேசுவை பார்க்கிறேன்**

**எபிரெயர் 2:10-18**

10. ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது.

11. எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்:

12. உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும்;

13. நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்.

14. ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,

15. ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.

16. ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்.

17. அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது.

18. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.

**தியானம்**
இதைப் போன்ற கடினமான காலங்களில், தேவனுடைய ஊக்கமளிக்கும் வார்த்தைகளுக்காக அவரைப் ஸ்தோத்தரிக்கிறோம்.

எபிரேயர் புத்தகத்தில், தங்கள் மூதாதைய மதமான யூத மதத்தை கைவிட்டதற்காக சக யூதர்களால் மோசமாக நடத்தப்பட்ட யூத கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க கர்த்தர் "புத்திமதியான வார்த்தைகளை" (எபி. 13:22) கொடுத்தார். இயேசுவைப் பின்பற்றியதற்காக அவர்கள் துரோகிகள் என்று தூற்றப்பட்டனர். கணவனால் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட ஒரு தாயையும் அவளுடைய ஐந்து

குழந்தைகளையும் இது நினைவுபடுத்துகிறது. அவர் ஆத்திரமடைந்தார். அவள் இயேசுவை நம்பினாள், இனி குடும்ப சிலைகளை அவள் வணங்கவில்லை.

இயேசுவின் துன்பத்தையும் மரணத்தையும் விளக்க எழுத்தாளர் "ஏனென்றால்" (2:10) என்று தொடங்குகிறார்: நமது இரட்சிப்பின் நிறுவனரான இயேசுவை துன்பத்தின் மூலம் பரிபூரணமாக்குவது பொருத்தமாக தேவன் கருதினார். பிரயாசத்திலும் வெற்றியிலும், இயேசு ஒரு மனிதனாகவும், கர்த்தரின் குமாரனாகவும், நம் இரட்சகராகவும் தனது பரிபூரணங்களை வெளிப்படுத்தினார்.

கர்த்தரின் பிள்ளைகளாகிய நமக்கு, நம் வாழ்வு இயேசு கிறிஸ்துவோடு இணைந்திருக்கிறது. பரிசுத்தப்படுத்துபவர் அவரே, மற்றும் பரிசுத்தப்படுத்தப்பட்ட நாமும் அவருடனே பொதுவான வாழ்க்கை ஆதாரத்தைப் பகிர்ந்து கொள்கிறோம். நாம் கர்த்தரின் குடும்ப உறுப்பினர்கள்! இவ்வாறு கிறிஸ்து நம்மை சகோதரர்கள் (சகோதர சகோதரிகள்) என்று அழைக்க வெட்கப்படவில்லை. உண்மையில், நல்ல நேரத்திலோ அல்லது துன்பத்திலோ, இயேசு தாம் யார் என்றும், பிதாவுக்கு அவர் எவ்வாறு சேவை செய்கிறார் என்பதைப் பற்றி மூன்று அறிவிப்புகளைச் செய்கிறார், அவருடைய முன்மாதிரியுடன் நம்மை ஊக்குவிக்கிறார்:

(1) மகிழ்ச்சியான சாட்சி: “உன் பெயரை என் சகோதரர்களுக்குச் சொல்வேன்; சபையின் நடுவிலே நான் உமது துதியைப் பாடுவேன்.”

(2) உறுதியான விசுவாசம்: "நான் அவர்மேல் நம்பிக்கை வைப்பேன்."

(3) கர்த்தரின் பிள்ளைகளுடன் அன்பான ஐக்கியம்: "இதோ, நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்."

## ஜெபம்

கர்த்தராகிய இயேசுவே, சீர்குலைவு, நோய் மற்றும் மரணம் நிறைந்த இந்நாட்களில், என்னை உம்மைப் போல் ஆக்குவாயாக. என்னை உடைத்து என்னை வடிவமைக்கவும்: ஓ உன்னைப் போல நான் இருக்க! மனதுருக்கம், அன்பு, மன்னித்தல், மென்மை மற்றும் இரக்கம் நிறைந்தவர்களாய்; ஆதரவற்றவர்களுக்கு உதவுதல், சோர்ந்துபோனவர்களை தெளிந்தவர்களாக உற்சாகப் படுத்துதல், அலைந்து திரிந்த பாவியைத் தேடுதல் போன்றவற்றை நாங்கள் செய்ய வேண்டும். ஆமென்.

## செயல்

சந்தோஷமான சாட்சிகளாக இருங்கள், உறுதியான விசுவாசத்தை நடைமுறைப் படுத்திக் கொள்ளுங்கள். தேவனுடைய குடும்பத்திலுள்ள சகோதர, சகோதரிகளுடன் அன்பின் ஐக்கியத்தால் ஆசிர்வதிக்கப்படுங்கள்.

*அருட்திரு முனைவர் மைக்கேல் ஷென்*
*முதல்வர் எமிரிடஸ்*
*சிங்கப்பூர் பைபிள் காலேஜ்*

**17 மார்ச் • லெந்து இரண்டாம் வாரத்தின் வியாழக்கிழமை**

**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து**

**சங்கீதம் 1:1-6**

1. துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,

2. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

3. அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.

4. துன்மார்க்கரோ அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருக்கிறார்கள்.

5. ஆகையால் துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை.

6. கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும்.

**தியானம்**

சங்கீதம் 1:1-6 வசனங்கள் வேதத்தில் பிரியமாயிருக்கிற பாக்கியவானின் வாழ்க்கையை சித்தரிக்கிறது. வேதத்தை மையமாக கொண்ட வாழ்கையின் பரிமாணத்தை, நீர்க்கால்களின் ஓரமாக நடப்பட்ட மரத்திற்கு உவமையாக உபயோகப்படுத்துகிறது இந்த சங்கீதம். அவன் நீர்க்கால்களின் ஓரமாக நடப்பட்ட மரத்தைப் போல் இருப்பான். அவனுடைய வேர்கள் நிலத்தில் ஆழமாக பாய்கிறது. நீர்கால்களின் ஓரமாகத் தன்னை ஊன்றித் தண்ணீரையும், தான் வாழவும் செழிக்கவும் தேவையான ஊட்டச்சத்துக்களையும் மேலே உறிந்துக் கொள்கிறான். ஆகவே இம்மரம் நல்ல பழங்களையும், எல்லா பருவக்காலங்களிலும் நிலைத்து நிற்கிறது. அதனுடைய இலைகள் உதிராது. வேதத்தில் வேர் கொண்ட வாழ்க்கை கிறிஸ்தவர்களை உருவாக்குகிறது, இவர்கள் வாழ்க்கையின் எல்லா காலங்களிலும், நேரங்களிலும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள். துன்பமோ, நஷ்டமோ, ஏமாற்றமோ, உபவத்திரமோ எதுவாக இருந்தாலும், வேதத்தில் ஊன்றப்பட்ட கிறிஸ்தவன் ஆவியில் ஆரோக்கியமாக இருப்பான், கனியற்றவனாக குன்றிப்போக மாட்டான். கர்த்தருக்குள் அதிகமாக வளரவேண்டும் என்று வாஞ்சிக்கிறவன், தேவனுடைய வார்த்தையில் இன்னும் ஆழமாக தன்னுடைய வேர்களை பதிக்க வேண்டும் என்று விரும்புவான். இதற்கு மாறாக துன்மார்க்கரோ கர்த்தருடைய வார்த்தையை தியானிப்பதிலிருந்து தூரமாக போனால் அதன் விளைவு மரணமும் நாசமும் தான் என்று இந்த வசனம் நமக்கு விளக்குகிறது.

**ஜெபம்**
கர்த்தாவே, சவால்களுக்கு மத்தியிலும் பேரிடர்களுக்கும் இந்த உலகத்தில் நிகழ்ந்துக் கொண்டிருக்கும் பெருந்தொற்றுக்கு மத்தியிலும் எங்களை நிலைத்து நிற்க பண்ணுகிற உம்முடைய வார்த்தைகளுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்முடைய வார்த்தையில் பிரியமாயிருக்க எங்களுக்கு உதவிச் செய்யும். ஜீவியத்தின் பூரணத்தை எல்லோரும் அனுபவிக்கும்படிக்கே நீர் வந்தீர், அதேபோல நாங்கள் அனுபவிக்க வேண்டும். ஆமென்.

**செயல்**
கர்த்தருடைய வேதத்தை தியானிப்பதில் நேரத்தை செலவிடுங்கள், வாழ்க்கையின் பள்ள மேடுகளை எதிர்கொள்ள அதிலிருந்து பெலனைப் பெற்றுக் கொள்ளுங்கள். பெருந்தொற்றினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நம்பிக்கையற்ற வேளையில் நம்பிக்கையளித்து உதவ முயலுங்கள்.

*அருட்திரு முனைவர் M. மணி சாக்கோ*
*பொது செயலாளர்*
*த பைபிள் சொஸைடி ஆப் இந்தியா*

**18 மார்ச் • லெந்து இரண்டாம் வாரத்தின் வெள்ளிக்கிழமை**

**இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்**

**எபிரெயர் 3:7-19**

7. ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்,

8. வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.

9. அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, நாற்பது வருஷகாலம் என் கிரியைகளைக் கண்டார்கள்.

10. ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி;

11. என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்.

12. சகோதரரே, ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களிலொருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.

13. உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்.

14. நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்.

15. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே.

16. கேட்டவர்களில் கோபமூட்டினவர்கள் யார்? மோசேயினால் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அப்படிச் செய்தார்களல்லவா?

17. மேலும், அவர் நாற்பது வருஷமாய் யாரை அரோசித்தார்? பாவஞ்செய்தவர்களையல்லவா? அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே.

18. பின்னும், என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக்குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக்குறித்தல்லவா?

19. ஆதலால், அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமற்போனார்களென்று பார்க்கிறோம்.

**தியானம்**

நான் ஒரு இளம் பெற்றோராக இருந்தபோது, என் குழந்தைகள் முக்கிய வளர்ச்சிக்கான மைல்கற்களைக் காணவில்லை என்ற எண்ணம் என்னை லேசான பீதிக்கு அனுப்பும். வளர்ச்சி தொடரும் வகையில், நாம் தலையிட ஏதேனும் வழி இருக்கிறதா என்று பார்க்கத் துடித்தேன்.

இந்தக் கடிதத்தின் ஆசிரியரின் பதில் இதுதான் என்று நான் நம்புகிறேன். அவர் எழுதிக் கொண்டிருந்த சபை நன்றாக வளர்ந்து கொண்டிருந்தது, ஆனால் இப்போது தேக்கம் அடைந்துள்ளது. அசையாமல் இருப்பது என்பது ஏதோ தவறு உள்ளது என்று அர்த்தம்.

இந்த பத்தியில், அவர் விசுவாசிகளை பாலைவனத்தில் அலைந்து திரிந்த இஸ்ரவேலர்களுடன் ஒப்பிடுகிறார். அவர்கள் வாக்குறுதியளிக்கப்பட்ட நிலத்தை நோக்கி நகரவில்லை என்றால், அவர்கள் வடிகால் சுற்றி வருகிறார்கள் என்று அர்த்தம். பாவம் வேரூன்றத் தொடங்குகிறது, அது நாம் சரியாகத் தான் இருக்கிறோம் என்று நம்மை நன்றாக ஏமாற்றுகிறது - உண்மையில், நம் இதயங்கள் கடினமடைகின்றன.

இந்த ஆவிக்குரிய சோம்பலுக்கு ஒரே தீர்வு கிறிஸ்துவின் குரலைக் கேட்டு கீழ்ப்படிவதுதான். ஜீவனுள்ள தேவனிடமிருந்து யாரும் விலகிவிடக்கூடாது என்பதற்காக, ‘ஒவ்வொரு நாளும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்’ (வ. 13) என்று ஆசிரியர் சபைக்குக் கட்டளையிடுகிறார்.

இது தேவாலயத்தின் இயல்பான பார்வையாக இருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். யாருடைய கால் வழுக்கினாலும், எவரும் பின்வாங்குவது மிகவும் எளிது. அனைவருக்கும் நிலையான தலையீடு தேவை. நாம் ஒவ்வொரு நாளும் ஒருவருக்கொருவர் வார்த்தையைப் பிரசங்கிக்க வேண்டும் - நம் வசம் உள்ள எல்லா வழிகளிலும். அனைவரும் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று நாங்கள் ஏங்குகிறோம், உண்மையில் அனைவரும் வாக்குறுதியளிக்கப்பட்ட இளைப்பாறுதலை அடைய வேண்டும்.

என் சகோதரனே, என் சகோதரியே - இயேசு நம்மை 'வாருங்கள்!' என்று அழைக்கிறார். இன்று, நீங்கள் அவருடைய குரலைக் கேட்டால், உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர்கள்.

**ஜெபம்**

பரலோகத்திலுள்ள பிதாவே, பாவம் என்னை ஏமாற்ற விடாதேயும். என்னை அவிசுவாசத்தில் விழ விடாதீர்கள். என் சகோதரர்களின் குரலின் மூலம் உமது

வார்த்தையை என் இதயத்தில் பேசுங்கள். கிறிஸ்துவில் நான் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதியாகப் பற்றிக்கொள்ள எனக்கு உதவுங்கள். ஆமென்.

**செயல்**

நண்பரே, மீண்டும் தேவாலயத்திற்குச் செல்ல வேண்டிய நேரமா? தொற்றுநோய் உங்களை விலக்கி வைத்திருக்கிறதா? நீங்கள் மீண்டும் ஒருமுறை அவருடைய குரலைக் கேட்கக்கூடிய இடத்திற்குச் சென்று அவருடைய மக்களிடையே இருங்கள்.

*அருட்திரு முனைவர் தேவ் மேனன்*
*போதகர்*
*சீயோன் பிஷன் பைபிள்-பிரஸ்பைடிரியன் சர்ச்*

**19 மார்ச் • லெந்து இரண்டாம் வாரத்தின் சனிக்கிழமை**

**தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்**

**லூக்கா 15:1-3, 11-32**

1. சகல ஆயக்காரரும் பாவிகளும் அவருடைய வசனங்களைக் கேட்கும்படி அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

2. அப்பொழுது பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்கள்.

3. அவர்களுக்கு அவர் சொன்ன உவமையாவது:

11. பின்னும் அவர் சொன்னது: ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்.

12. அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான்.

13. சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்.

14. எல்லாவற்றையும் அவன் செலவழித்தபின்பு, அந்த தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி,

15. அந்த தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான்.

16. அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை.

17. அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்.

18. நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்.

19. இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி;

20. எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.

21. குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்.

22. அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்.

23. கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்.

24. என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்.

25. அவனுடைய மூத்தகுமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு;

26. ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து: இதென்ன என்று விசாரித்தான்.

27. அதற்கு அவன்: உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான்.

28. அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்.

29. அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை.

30. வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான்.

31. அதற்குத் தகப்பன்: மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது.

32. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே என்று சொன்னான் என்றார்.

**தியானம்**

நற்செய்தியின் எழுத்தாளரான லூக்கா ஒரு ஆரம்பகால கிறிஸ்தவ விசுவாசி. தொலைந்துபோன, குறைந்த, கடைசியான, மற்றும் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கான பெரிய இதயம் கொண்டவர் அவர். இயேசுவின் சீடராக, அவர்களுடன் தொடர்புபடுத்துவது பற்றி இயேசு கற்பித்த முக்கியமான பாடங்களை தேவாலயத்திற்கு எழுத முயன்றார்.

இன்றைய பைபிள் வாசகத்தில் ஒரு பாடம் உள்ளது. லூக்கா 15ல் 3 உவமைகள் உள்ளன - காணாமற்போன செம்மறியாடு, தொலைந்த நாணயம் மற்றும் தொலைந்த மகன். 3 உவமைகளில் ஒவ்வொன்றிலும் மூன்று யோசனைகள் மீண்டும் மீண்டும் வருகின்றன. முதலாவதாக, அனைத்து உவமைகளும் தொலைந்து போன ஒரு பொருளை/தனி நபருடன் தொடங்குகின்றன. இரண்டாவதாக, அவை அனைத்தும் செயலில் தேடுதல்/இழந்தவைக்காக காத்திருத்தல் ஆகியவை அடங்கும். மூன்றாவதாக, தொலைந்து போன பொருள்/தனிமனிதன் தொலைந்து போகாமல், கிடைத்தவுடன் அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் முடிக்கிறார்கள்.

இந்த மூன்று யோசனைகளின் முறை மூன்றாவது உவமையில் உடைக்கப்பட்டுள்ளது. தொலைந்துபோன மகன் சுயநினைவுக்கு வந்து திரும்பியபோது, தந்தையின் தீவிர ஏக்கமும் காத்திருப்பும் சுறுசுறுப்பான மகிழ்ச்சியாக மாறியது. ஆனால் இங்குதான் மூன்று உவமைகளுக்கு இடையேயான வேறுபாடு உள்ளது. மூத்த சகோதரர் கொண்டாட்டத்தை கடுமையாக எதிர்த்தார் மற்றும் அதன் எந்தப் பகுதியையும் விரும்பவில்லை.

அவரது காரணம் அவரது இதயம் மற்றும் மனதின் மையத்தில் இருப்பதை வெளிப்படுத்தியது: "கொண்டாட்டமும் பாராட்டுகளும் கடமைகளையும் கட்டளைகளையும் கண்டிப்பாக கடைபிடிப்பவர்களுக்கு மட்டுமே!" அவரது இருப்பின் மையத்தில், தவறான, வருந்திய பாவிகளுக்கு தந்தையின் கண்ணுக்கு இடமில்லை. எனவே தந்தை மற்றும் மூத்த மகனின் சிந்தனை மற்றும் இருத்தல் ஆகியவற்றின் மையக்கருவுக்கு இடையில் எந்தச் சீரமைப்பும் இல்லை.

மூன்று உவமைகளின் செய்தி யாரை நோக்கியது? வச. 1-3, 3 உவமைகள் அதன் மத வாயில்காப்பாளர்கள் உருவாக்கிய பிரிக்கப்பட்ட மற்றும் சுய-நீதியான நிறுவனத்தை நிவர்த்தி செய்வதைக் குறிக்கின்றன என்று நமக்குக் கூறுகிறது. பிரபலமான புரிதலுக்கு மாறாக, லூக்கா 15 இன் முக்கிய செய்தி, தேவன் தொலைந்து போனவர்களைத் தேடுகிறார், அவர்கள் திரும்பி வரும்போது மகிழ்ச்சியடைகிறார் என்பது அல்ல. இது செய்தியின் ஒரு பகுதியாகும், ஆனால் முக்கிய செய்தி என்னவென்றால், மனந்திரும்பிய பாவிகள் தங்கள் பரலோகத் தகப்பனிடம் திரும்பும்போது, மத அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும்

வாயில்காப்பாளர்களிடம் அன்பில்லாதவர்களாகவும் விரும்பத்தகாதவர்களாகவும் இருக்க வேண்டாம்!

இன்று மனந்திரும்பிய பாவிகள் பல வடிவங்களை எடுக்கலாம். நம்முடைய பரலோகத் தகப்பனைச் சந்திக்க அவர்கள் நம் சமூகங்களுக்குள் நுழையும்போது, அவர்கள் என்ன மாதிரியான மனப்பான்மையை உணருவார்கள்? அவர்கள் தந்தையின் இதயத்தை உணர்வார்களா அல்லது மூத்த சகோதரரின் அதிருப்தியையும் வெறுப்பையும் உணர்வார்களா?

**ஜெபம்**

ஆண்டவரே, உமக்கு முன்பாக எங்கள் சொந்த தகுதியற்ற தன்மையை அங்கீகரிக்க தேவாலயத்தில் எங்களுக்கு உதவுங்கள். எங்கள் சுயமரியாதையிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள். தொலைந்துபோன, தாழ்ந்த, கடைசியான, மற்றும் விட்டு வெளியேறியவர்கள் உங்களைத் தேடுவதற்காக எங்கள் கிறிஸ்தவ சமூகங்களுக்குள் நுழையும் போது எங்கள் உதடுகளில் வரவேற்பு மற்றும் விருந்தோம்பல் வார்த்தைகளை வைக்கவும்.

**செயல்**

திரும்பி வரத் தயாராக இல்லாத "தொலைந்த மகன்களில்" ஒரு ஆழமான வேலையைச் செய்ய தேவனிடம் பிரார்த்தனை செய்வோம். சபைகளாக, நம் மத்தியில் நுழையும் "தொலைந்த மகன்களை" நேசிக்கவும், வரவேற்கவும், கொண்டாடவும் தயாராக இருப்போம்.

*முனைவர் கால்வின் சோங்*
*இணைப் பேராசிரியர் (நடைமுறை இறையியல்)*
*சிங்கப்பூர் வேதாகம கல்லூரி*

**20 மார்ச் • லெந்து மூன்றாம் வாரத்தின் ஞாயிற்றுக்கிழமை**

## இவைகளெல்லாம் நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது

**1 கொரிந்தியர் 10:1-13**

1. இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள்.

2. எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள்.

3. எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள்.

4. எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே.

5. அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்.

6. அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது.

7. ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாடவும் எழுந்திருந்தார்களென்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனதுபோல நீங்களும் ஆகாதிருங்கள்.

8. அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி, ஒரேநாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம்பண்ணாதிருப்போமாக.

9. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக.

10. அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்.

11. **இவைகளெல்லாம்** திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள **நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது**.

12. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.

13. மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

**தியானம்**

COVID-19 தொற்றுநோய் உலகெங்கிலும் சில மில்லியன் மக்களின் மரணத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூகத்தின் அனைத்து அடுக்குகளிலும் உள்ள மக்களுக்கு இது கடினமான மற்றும் சவாலான காலமாகும். இத்தகைய இருண்ட மற்றும் கடினமான நேரங்கள் நம்மை சோதனைகளுக்கு ஆளாக்கிவிடும். சோதனைகள் இதுபோன்ற சாக்குப்போக்குகளை நியாயப்படுத்தலாம்: எனக்கு ஓய்வு கொடுங்கள், நான் இளைப்பாற விரும்புகிறேன் (இன்பமான காரியங்களில்), யாருக்கும் தெரியாது, நான் வீட்டிலிருந்து வேலை செய்கிறேன் என்று.

1 கொரிந்தியர் 10ல், “மேகம்” மூலம் தேவனின் வழிநடத்துதலை அனுபவித்த பாக்கியம் பெற்ற முன்னோர்களை பவுல் மேற்கோள் காட்டினார். தேவனுடைய வல்லமை அவர்கள் “கடலைக் கடந்து” செல்ல வைத்தது, மற்றும் தேவனின் "ஆவிக்குரிய உணவு மற்றும் தண்ணீர்" அவர்களை நிரப்பியது - இருப்பினும் கர்த்தர் அவர்களால் மகிழ்ச்சியடையவில்லை, மேலும் அவர்கள் வனாந்தரத்தில் அழிந்தனர். அவர்கள் “தீமையை விரும்பினார்கள்,” “விக்கிரக ஆராதனை செய்தார்கள்,” “பாலியல் ஒழுக்கக்கேட்டில் ஈடுபட்டார்கள்,” “கிறிஸ்துவை சோதித்தார்கள்,” மேலும் தேவனுக்கு எதிராக “முணுமுணுத்தார்கள்”. அற்புதங்கள் வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்திற்கு வருவதற்கு உத்தரவாதம் அளிக்காது என்று அதிக நம்பிக்கை கொண்ட கொரிந்தியர்கள் எச்சரிக்கப்பட்டனர். "மனிதனுக்கு பொதுவான" சோதனைகள் எந்த சகாப்தத்திலும், ஒரு தொற்றுநோயாக இருந்தாலும் கூட அவை தொடர்கின்றன. நம்மில் சிலர் உணரக்கூடிய சிலாக்கியமாகவும் நம்பிக்கையுடனும் இருப்பதால், க்நாம் “விழுந்துவிடாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.” "பரிசுக்கு தகுதியற்றவர்" மற்றும் "கிரீடத்தை இழப்பது" (1 கொரி 9) போன்ற ஆபத்து மிகவும் உண்மையானது. ஆனால் நம் தேவன் உண்மையுள்ளவர், அவர் ஒரு வழியை உருவாக்குவார். கேள்வி என்னவென்றால், நாம் அவருடைய வழியைத் தேர்ந்தெடுத்து, கீழ்ப்படிவோமா?

இஸ்ரவேலர்கள் அனுபவித்த அற்புதங்கள் - இந்தக் காலங்களில் கர்த்தரின் உண்மைத்தன்மையை நினைவூட்டுவதாகவும் இருக்கும். நாம்…

1. தேவனின் வழிகாட்டுதலைத் தேடிப் பின்பற்றுவோம் - இஸ்ரவேலர்கள் மேகத்தைப் பின்பற்றினது போல;
2. வழியே இல்லை என்று தோன்றும்போது வழியைத் திறக்கும் கர்த்தரின் வல்லமையில் நம்பிக்கை வைப்போம் - அவர்கள் கடல் வழியாகச் சென்றதுபோல;

3. நம்முடைய எல்லா தேவைகளுக்கும் அவருடைய ஏற்பாட்டின் மீது சார்ந்திருப்போம் - ஆவிக்குரிய உணவையும் தண்ணீரையும் அவர்கள் உண்டது போலவே.

**ஜெபம்**

ஆண்டவரே, பகுத்தறிவுள்ளவர்களாகவும் சோதனைகளுக்கு எச்சரிக்கையாகவும் இருக்க எங்களுக்கு உதவுங்கள். நீங்கள் உண்மையுள்ளவர் என்பதை நாங்கள் அறிவோம். மேலும் ஒரு வழியை வழங்குவதற்கு நாங்கள் உங்களை நம்பியுள்ளோம். சோதனைகளை எதிர்த்து நிற்கும் தன்மையின் வலிமையை எங்களுக்குத் தந்தருளும், மேலும் உம் மீதான எங்கள் ஆர்வமும் அன்பும் உமது வழியைப் பின்பற்ற எங்களைத் தூண்டுவதாக.

**செயல்**

1. உங்கள் வாழ்க்கையில் பலவீனமான பகுதிகளை அடையாளம் காணவும், அவை உங்களை சோதனையிலும் பாவத்திலும் விழச் செய்யலாம்.
2. நீங்கள் சோதனைகளுக்கு ஆளாகக்கூடிய தேவைகள் மற்றும் சுமைகளை அடையாளம் காணவும்.
3. இந்தப் பட்டியல்களில் பிரார்த்தனை செய்வதைத் தவிர, நீங்கள் நம்பும் ஒருவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள், இதன் மூலம் நீங்கள் பொறுப்புக்கூற முடியும்.

*அருட்திரு டொமினிக் யோ*
*முன்னணி போதகர், டிரினிட்டி கிறிஸ்தவ மையம்*
*பொது கண்காணிப்பாளர், அசெம்பிளிஸ் ஆஃப் காட் ஆஃப் சிங்கப்பூர்*